# இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளின் பண்பாட்டு விழுமியங்கள் இணையவழிக் கையளிப்பில் எதிர்நோக்கும் சவால்கள்

**த. முத்துராஜா[1], கி. கருணா[2]**

[1]ஆசிரியர் கலாசாலை, கோப்பாய், இலங்கை

[2]சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புல கற்கைகள் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ,இலங்கை

dharshi.muthurajah@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பயனுறுதிவாய்ந்த சிறந்த பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய கல்வி, மாணவர்களின் வளர்ச்சியில் ஒப்பிடமுடியாத அடித்தளத்தை எடுத்துக் கொடுக்கிறது. புதிய கல்விச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் மாணவர்களுக்கு இணையவழிக் கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதனால் தற்போது கல்வி அபிவிருத்தியானது செயற்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கற்றல் – கற்பித்தல் முறையாக விருத்தியடைந்து வருகிறது. மாணவர்களை சிறந்த தேர்ச்சிகளை அடையச்செய்து அவர்களை மாற்றமுறும் உலகின் சிறந்த பிரசைகளாக மாற்றுவதில் கல்வியின் பங்கு மிக முக்கியமானது. மாணவர்களுடைய வாழ்க்கையைத் தீர்மானிப்பது அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற ஆசிரியர்களே என்பதனை எவரும் மறுக்க முடியாது. ஆசிரியர்களின் வாண்மைச் சிறப்பு வெளிப்படவும் கற்றல் – கற்பித்தல் செயற்பாடு வெற்றிபெறவும் அவர்கள் காலத்திற்குக் காலம் தங்களை புதுப்பித்துக் கொள்வது அவசியமானதொன்றாகும். இதன் அடிப்படையில் தற்கால சூழ்நிலையின் அடிப்படையில் இணையவழிக் கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக ஆசிரியர்கள் மத்தியில் காணப்படும் சவாலான நிலைமைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இணைக்கலைத்திட்டம் கட்டமைப்பிலும் கற்பித்தலிலும் வினைத்திறனுடையதாக மாற்றமுற்று வருகிறது. இதனை அடையச்செய்ய வேண்டியது ஆசிரியரின் பொறுப்பாகும். ஆய்வுக்குடித்தொகையில் உள்ளடங்கும் மாணவர்களது தயக்கங்களை வெளிக்கொணரக்கூடிய வகையில் ஆய்வு வினாக்களை உருவாக்கி அவற்றை ஆய்வுசெய்தல், இணையவழிக் கற்பித்தலின் இயல்புகள், திட்டமிடல், பங்குபற்றுனரின் செயற்பாட்டு நிலை, வசதி வாய்ப்புக்கள் என்பவற்றை விளக்குவதோடு தரவுப் பகுப்பாய்வுமுறையாக பண்புசார்முறை பயன்படுத்தப்பட்டுள்ளமையினால் இவ்வாய்வு விபரண ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாண வலயத்திற்குட்பட்ட கோப்பாய்க் கோட்ட இடைநிலை 10 பாடசாலைகளை ஆய்வு மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல், அவதானிப்பு, ஆவணங்கள் ஆகியவற்றின் மூலம் தரவுகள் பெறப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இவ்வாய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் இணையவழிக் கற்றல் கற்பித்தல் பற்றிய அறிக்கை நேர்த்தியான முறையில், வினைத்திறனான கற்றல் கற்பித்தல் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் காணப்படவில்லை. மேலும் இணையவழிக் கற்றல் உபகரணங்கள் பாட செயற்பாட்டிற்கு ஏற்றவாறு திட்டமிட்டு ஒழுங்கமைப்பதில் சங்கீத, நடன ஆசிரியர்களின் வினைத்திறன் மேலும் வலுவூட்டப்படவேண்டிய நிலையிலேயே காணப்பட்டதை அவதானிக்க கூடியதாக காணப்பட்டது. வகுப்பறையில் இணையவழிக் கற்றல் சாதனங்களின் ஒழுங்கமைப்பின்மை, ஆசிரியருக்கு மேசைக்கணினி, மடிக்கணனி மற்றும் கையடக்கதொலைபேசி போன்ற சாதனங்களினூடாக இணையவழிக் கற்பித்தலை மேற்கொள்வது தொடர்பான போதிய தெளிவின்மை. முன்னாயத்தமின்றி பாடச்செயற்பாடுகளை முன்னெடுத்தல். மாணவர்களுக்கு ஏற்றமுறையில் பாட உள்ளடக்கத்தினை திட்டமிட்டு நேர வரையறைக்குட்பட்டு மாணவர்களுக்கு எழும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் முறைமைகளைப் பயன்படுத்தாமை. அனைத்துப் பாடங்களையும் ஒரேமாதிரியாக விரிவுரைமுறைக் கற்பித்தலை பயன்படுத்துதல் மற்றும் செய்முறைப் பாடத்தின்போது ஏற்படுகின்ற தாமதங்கள் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுமுகமாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** இணைக்கலைத்திட்டம், பண்பாட்டு விழுமியங்கள், மெய்நிகர் வகுப்பறை

**அறிமுகம்**

ஒரு மனிதன் சமூகத்தில் சிறந்த நற்பிரசையாக திகழ்வதற்கு விழுமியக்கல்வி இன்றியமையாததாகக் காணப்படுகிறது. இக்கல்வியை வழங்கும் நிறுவனங்களாக பாடசாலைகள் திகழ்கின்றன. கல்வி என்பது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுடன் கூடிய ஒன்று என வரையறுக்க கூடிய ஒன்றல்ல. அது பண்பு சார்ந்ததாகும், நல்விழுமியங்கள் சார்ந்ததாகும். தேர்ச்சியும், திறனும் மட்டும் மனிதனை மனிதனாக்கிவிட முடியாது. சமயமும் விழுமியமும் ஒழுக்கமும் இணையும்போதுதான் மனிதன் சிறந்த சமூகமயமானவனாக உருவாகின்றான்.

இன்று அறிவியலும் தொழில்நுட்பமும் அபரிமிதமான வளர்ச்சியைக் கொண்டிருக்கையில் மனித விழுமியங்களும் பெறுமானங்களும் தேக்கநிலையில் காணப்படுகிறது. அறிவு ரீதியான வளர்ச்சிக்கு ஏற்ப பண்பாட்டு முதிர்ச்சி ஏற்படவில்லை. இதற்கான காரணியாக பாடசாலைகளையே கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பாடசாலைகள் மாணவர்களிடையே விழுமியக் கல்வியை வளர்க்கத் தவறிவிடுகின்றன என்ற குற்றச்சாட்டு இவர்களால் முன்வைக்கப்படுகின்றது.

இந்நிலையினை மாற்றுவதற்கு கல்வி அமைச்சு இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொள்ள வழிப்படுத்துகின்ற போதிலும் பாடசாலைகள் பாடத்திட்டதில் பெறுபேற்றினை அடிப்படையாக கொண்ட கற்றல் கற்பித்தலுக்கே முன்னுரிமை வழங்குகிறது.

இத்தகைய சமூக விழுமியங்களை மாணவர்கள் மத்தியில் வளர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகளை கல்வி அமைச்சு எடுத்தாலும் அவை பாடசாலைக்கு சவால் மிக்கவையாகக் காணப்படுகின்றன. இதன் அடிப்படையிலேயே "இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளின் பண்பாட்டு விழுமியங்கள் இணையவழிக் கையளிப்பில் எதிர்நோக்கும் சவால்கள்" என்னும் தலைப்பிலான இவ்வாய்வு கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளைக் களமாகக் கொண்டு ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வின் நோக்கம்**

இன்றைய மாற்றமுறும் உலகில் மனிதர்களிடம் சிறந்த விழுமியப்பண்புகள் குறைவடைந்து சுயநலப்பண்பே மேலோங்கிக் காணப்படுகிறது. இதனால் பல விரும்பத்தகாத சம்பவங்களும் அழிவுகளும் இடம்பெற்று வருகின்றன. இவற்றுக்கெல்லாம் காரணம் இன்றைய மனிதர்களின் மனநிலை மாற்றமே. இந்நிலை மாறவேண்டுமெனில் மாணவர்களிடத்தே விழுமியப்பண்புகள் வளர்க்கப்படவேண்டும்.

சிறந்த விழுமியக்கல்வியை அளிப்பதற்கு பாடசாலை இணைக்கலைத்திட்டம் பெரிதும் துணைபுரிகிறது. இசை, நடனம் ஆகிய செய்முறைப் பாடங்களினூடாக சிறந்த பண்பாட்டு விழுமியக்கல்வியினை அளிப்பதன் மூலமே மாணவர்களிடம் பண்புசார் விழிப்புணர்வை ஏற்படுத்தமுடியும். அத்தகைய விழுமியப்பண்புகளை இணையத்தின் ஊடாக வளர்ப்பதில் பாடசாலைகள் எதிர்நோக்குகின்ற சவால்களை இனங்கண்டு அவற்றிக்கான தீர்வுகளை முன்வைப்பதனூடாக மாணவர்களிடம் பண்பாட்டுவிழுமிய மேம்பாடு ஏற்படுவதற்கான நிலையான வழிமுறைகளை ஏற்படுத்துதலே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

இன்றைய மாணவ சமூகத்தில் பண்பாட்டுவிழுமிய நிலைகள் தேக்கநிலையில் உள்ளன. பாடசாலைகளின் வினைத்திறனான செயற்பாடுகளுக்கு விழுமியத்தின் பாதிப்புநிலை இடையூறாக உள்ளது.. ஒழுக்க விழுமியங்களின் சீரின்மையால் பாடசாலைக்கும் சமூகத்திற்குமான இடைவெளி அதிகரித்து தகுதியான மாணவர்களின் உள்வருகை குறைவடைகின்றது.

மாணவர்களிடையே விழுமியத்தை ஏற்படுத்துவது தொடர்பாக ஆசிரியர்கள் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். ஆசிரியரானவர் விழுமியம் பற்றி வெறுமனே வகுப்பறையில் மட்டும் பேசுவதோடு நின்று விடாமல் தமது வாழ்விலும் எடுத்துகாட்டாக நடக்க வேண்டும். தன்னால் முடியாத விழுமியத்தை மாணவர்கள் செய்ய வேண்டும் என வலியுறுத்துவது ஆசிரியரின் மிகப் பெரிய தவறாகும். ஆசிரியரானவர் முழுமையான மன வளர்ச்சி, சமுதாய அக்கறை, தேசிய நலன், உலக மனப்பான்மை, விழிப்புணர்வு போன்ற உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டவராக இருத்தல் அவசியம்.

எனவே இவ்வாறான நிலைமைகளை இனங்கண்டு அவற்றிக்கான தீர்வை பெறுவதனூடாகவே பாடசாலைகளில் இழந்த

இணைக்கலைத்திட்டம் மற்றும் மறைக்கலைத்திட்ட கல்வியை ஈடுசெய்யலாம் என்ற அடிப்படையில் இவ்வாய்வை ஆய்வாளர்கள் முன்னிலைப்படுத்துகிறார்கள்.

### ஆய்வு வினாக்கள்

1. கோப்பாய் கோட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களிடையே பண்பாட்டுவிழுமிய செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை எவ்வாறு உள்ளது?
2. இணையமூடாக இணைப்பாடவிதான பண்பாட்டுவிழுமிய செயற்பாடுகளை மேம்படுத்துவதில் பாடசாலை முழுமையாகச் செல்வாக்குச் செலுத்தமுடியாமைக்கான இடர்பாடுகள் எவை?
3. மாணவர்களிடையே பண்பாட்டுவிழுமிய மேம்பாட்டினை ஏற்படுத்துவதில் பாடசாலைகளின் செல்வாக்கை அதிகரிக்கச் செய்வதற்கான வழிவகைகள் எவை?

### ஆய்வின் மட்டுப்பாடுகள்

இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளாக பல்வேறு செயற்பாடுகள் பாடசாலை மட்டத்தில் காணப்படுகின்றபோதிலும் இங்கு ஆய்வாளர்களால் ஆற்றுகைக்கலைகளில் சங்கீதம் மற்றும் பரதநாட்டியம் பற்றிய இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் பாடசாலை மட்டத்தில் எவ்வாறு உள்ளன என்பது பற்றியும் அதற்கு பாடசாலை மாணவர்கள் கொடுக்கும் முக்கியத்துவமும் இதனால் பண்பாட்டு விழுமியம் பேணப்படும் விதமும் எடுத்தாராயப்படுகிறது.

### இணைக்கலைத்திட்டம்

பாடசாலையின் வகுப்பறைப் கற்றல் – கற்பித்தலுக்கு உடல்வளர்ச்சி, உளவளர்ச்சி, சமுதாய வளர்ச்சி, பண்பாட்டுவளர்ச்சி ஆகியவை வளர்க்கப்படக்கூடிய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்வதன் மூலம் மாணவரை ஒரு முழுமனிதனாக்கும் செயற்றிட்டமே இணைப்பாடவிதானக் கலைத்திட்டம் எனப்படும்.

நவீன சமுதாயத்தில், நுகர்வோர் மீதான போக்கு மற்றும் பொருள் மதிப்புகளை வைத்திருத்தல் ஆகியவை மேலும் மேலும் கவனிக்கப்படுகின்றன. தனிநபரின் அறிவுசார் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பகுத்தறிவு, தருக்க அணுகுமுறை கூறுகளை இடமாற்றம் செய்கிறது. இது அருவமான கலாசார பாரம்பரியத்தின் தேய்மானம், மனிதனின் உள் உலகத்தின் வீழ்ச்சி மற்றும் மாணவரது படைப்பாற்றல் திறன் குறைவதற்கு வழிவகுக்கிறது.

### கல்விப் பண்பாட்டு விழுமியம்

கல்வி, விழுமியம் என்பவற்றின் அர்த்தம் பல வடிவங்களில் கல்வி நிறுவனங்களால் முன்வைக்கப்படுகின்றது. கல்வி என்பது பாடத்திட்டம், முறைகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. கல்வி விழுமியங்களுடன் இணைந்து இயங்கும்போது சமூகத்தில் மாணவர்களின் நடத்தை மனப்பாங்குகளில் சாதகமான விளைவுகளைக் கொடுத்திருப்பதனை சமூக, பொருளாதார, உளவியல், கல்வி ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

பண்பாட்டு விழுமியம் பாடசாலைச் சூழலிலும், வெளிச் சூழலிலும் மாணவர்கள் வெளிப்படுத்தும் ஆற்றல், சிறப்பான முறையில் தன்னைக் கையாளும் ஆற்றல்கள், கலாசாரத்துடன் இணைந்த வகையில் மானிட விழுமியங்களை நடைமுறைப்படுத்துகின்ற ஆளுமைகளை உருவாக்குகின்றது.

மனித விழுமியங்கள் என்பது வாழும் சமுதாயத்தினால் அங்கிகரிக்கப்பட்ட நற்பண்புகளான அன்பு, கருணை, கரிசனை, இன்னாசெய்யாமை, நீதி, நேர்மை, நன்னடத்தை, பிறரை மதித்தல், அடக்கம் என்பன சமூக விழுமியங்களாகும். (குமாரசாமி.சோ,2015. பக்.4)

மற்றவர்களின் செயற்பாட்டிற்கு எந்தவிதமான குறுக்கீட்டையும் ஏற்படுத்த முற்படாமல் இருக்கின்ற நிலையை அவர்கள் மத்தியில் ஏற்படுத்துதலே ஒரு சிறந்த மனித விழுமிய மேம்பாடாகும். (கோபாலகிருஸ்ண ஐயர்.ப,2003.பக்.118)

### மெய்நிகர் வகுப்பறை

இணையவழி கற்றல் – கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளில் ஒன்றாக இலங்கை கல்வி அமைச்சினால் தற்கால இடர்நிலைமையை கருத்தில் கொண்டு மெய்நிகர் வகுப்பறைக் கற்பித்தல் (Virtual Learning Portal) செயற்பாடானது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வகையில் ஒலி ஒளிப்படப்பலகை, மின்புத்தகம், மின்னகராதி, மின்நூலகம், மின்மொழிபெயர்ப்பு, மின்வழிக்கற்றல்,

நிகழ்படக்கருத்தரங்கு, மொழி ஆய்வுக்கூடம், போன்றவற்றின் அறிமுகம் தற்கால கற்றல் – கற்பித்தலில் இதன் பயன்பாடு என்பன மிகவும் உன்னதமான நிலையில் காணப்படுகிறது. தகவல் தொழில்நுட்பத்தின் துணையுடன் இணையவழிக் கற்றல் பல நன்மைகளை அளிக்கின்றது. (சாலாவாணி.ஸ்ரீ,2019.பக்.41)

**பாடசாலைகளில் இசை, பரதக்கலைகள் கற்பித்தலின் நோக்கங்கள்**

- இணைக்கலைத்திட்டம் என்பது கலை மற்றும் வாழ்க்கையில் அழகைக் கவனிக்கும் திறனை மேம்படுத்துகிறது.
- சங்கீத, பரதக் கலைகள் ஒரு நபரின் உணர்ச்சி அனுபவங்கள். அவை இயற்கை, கலை போன்ற நிகழ்வுகளின் மதிப்பீட்டு அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டவை.
- ஆசிரியர், மாணவர்களுக்கிடையிலான இடைத்தாக்கம் வலுவடையும்
- கற்றல் கற்பித்தலுக்கு அப்பால் அவர்களின் விசேட ஆற்றல்கள், திறன்கள், மனப்பாங்கு என்பவற்றை விளங்கிக்கொள்ள வழிவகுக்கும்.
- சகமாணவர்களுடன் உறவுநிலை மேம்படவும் அவர்களுடன் இணைந்து பணியாற்றவும் புதியவிடயங்களைக் கற்றுக்கொள்வும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.
- தனது சுயம் பற்றி அறிந்துகொள்ளவும் ஆளுமையை வளர்த்துக்கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

**பாடசாலைக் கல்வியில் சங்கீதம், பரதக் கலைகளின் முக்கியத்துவம்**

இலங்கைக் கலைத்திட்டத்தில் சங்கீதம், பரதக்கலைகள் முறைசார் கல்வி நிறுவனங்களான முன்பள்ளி தொடக்கம் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும், தேசிய கல்வியியல் கல்லூரிகளிலும் இவற்றுக்குப் புறம்பாக தனியார் கல்வி நிறுவனங்களிலும் சமூக நிறுவனங்களிலும் இப்பாடங்களுக்கான கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

இலங்கையில் ஆரம்பக் கல்வி வகுப்பறைகளில் கட்டாய பாடமாக காணப்படாதபோதிலும் அழகியல் ஒரு பாடமாக ஒன்றிணைத்துக் கற்பிக்கப்படுகிறது. அத்துடன் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகளிலும் தரம் 4,5 மாணவர்களுக்கு தனிப் பாடல், குழு இசை மற்றும் இசைவும் அசைவும் என பிரத்தியேக போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுகிறது.

இடைநிலைபிரிவான தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்களுக்கு இசை, நடனம் போன்ற பாடங்கள் கட்டாய பாடங்களாக உள்ளன. கல்விப் பொதுத் தராதர சாதாரண தரங்களில் (தரம் 10,11) சங்கீதம், பரதநாட்டிய பாடங்கள் தெரிவுப் பாடங்களாக உள்ளன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரங்களில் திறமைச்சித்தி பெற்றுக் கொள்ளுதல் க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் இப்பாடங்களை பயில்வதற்கான அடிப்படைத் தகைமையாகவும் கொள்ளப்படுகிறது.

யாழ்பாணப் பல்கலைக்கழக இசை மற்றும் நடனத்துறைகள், கொழும்பு கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரிகளிலும் இப்பாடங்களை சிறப்புப் பாடமாகக் கொண்ட பட்டக் கற்கைநெறிகள் காணப்படுகின்றன.

**மாணவர்களின் பண்பாட்டு விழுமிய விருத்திக்கு கலைகள் வழங்கும் பங்களிப்பு**

மாணவர்களிடையே அவர்களின் உள, உடல் வயதிற்கேற்ப உள்ளத்தில் புத்துணர்ச்சியும், உள்ளார்ந்த மகிழ்ச்சியையும் தரக் கூடிய உணர்வெழுச்சி சார்ந்த திறன்களின் ஊடாக ஆளுமையினை வடிவமைக்கும் கலைகளாக இசை நடனக்கலைகள் விளங்குகின்றன.

மாணவர்களின் அறிவுசார் முனைப்பினை சிறப்பாக வழங்குவதற்கு அவர்களது உணர்வெழுச்சி சார்ந்த விழுமியம் சார்ந்த அழகில் சார்ந்த விருத்தியும் ஏற்படுத்தப்படவேண்டும். அவ்வாறானால் மட்டுமே சமூக இசைவாக்கத்துடன் சமாதான சகவாழ்வு ஒன்றிணைந்து வாழும் முதிர்ச்சியும் அதற்கான திறன்களும் அவர்களிடையே ஏற்படும். இதனை அடைய பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடாக இணைப்பாடவிதான செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

**இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளை இரண்டு வகையாக ஆராய முடியும்**

- மாணவர்களுக்கு அழகியல் உடலியல் சார்ந்த விடயங்களில் திறனை ஏற்படுத்துகின்றமை
- இணைப்பாடவிதான செயற்பாடுகளை கற்றுக் கொண்டதன் விளைவாக ஆளுமையினைப் பெற்றுக் கொள்ளுதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வகையான செயற்பாடுகளை ஆராயும்போது இணைப் பாடவிதான செயற்பாடுகளின் உண்மையான பெறுமதியினையும் மாணவர்களிடம் இணைக் கலைத்திட்ட செயற்பாடுகளின் அவசியமும் உணரப்படுகின்றது. மாணவர்களுக்கு அழகியல் சார்ந்த திறனை ஏற்படுத்துலதனூடாக மாணவர்களிடையே ஆற்றுகைத்திறன், விமர்சிக்கும் திறன், ஏனையவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்தும். இவ்விடயங்களைக் கற்பதனால் நேரடியாக இவ்விடயங்கள் தொடர்பிலான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைப் பெறுவதில் மாணவர்கள் புலமையடைகின்றனர். பெற்றுக் கொண்ட திறனின் அடிப்படையில் புதிய விடயங்கள் தொடர்பில் தாமே கையாள முயலுதல், உதாரணமாக இசைக்கருவி ஒன்றினை கையாளும் திறன் கொண்ட மாணவன் பிறிதொரு சந்தர்ப்பத்தில் வேறு பல இசைக்கருவிகளை நுட்பமாகக் கையாளும் திறனைப் பெற்றுக் கொள்கிறான். இசைக்கருவிகளை மீட்டுவதைப்பற்றி தனித்தனியே பயிற்சி பெறாமல் இருந்தாலும் இசைப்பாடத்தில் மாணவன் பெற்றுக் கொண்ட நுணுக்கங்கள் இச்செயல்களில் ஈடுபடவும் சிந்திக்கவும் இயலக்கூடியதாக அமைகிறது. இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளைக் கற்றுக் கொண்டதன் விளைவாக மாணவர்கள் சிறந்ததொரு ஆளுமையினைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

**இணையவழிக் கல்வி மூலம் சங்கீத, பரதநாட்டிய பாடங்களின் அடைவு**

மாணவர்களை பொறுத்தவரையில் கற்றல் – கற்பித்தலில் ஆசிரியர்கள் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றமை கண்கூடு. பாடம் இடம்பெறும் போது சில மாணவர்கள் பாடங்களை பதிவுகளில் இட்டுவிட்டு சுயதேவைகளை பாட நேரத்திலேயே செய்வதற்கு முற்படுகின்றனர். இதனால் குறிப்பிட்ட நாட்களில் நடைபெறும் செய்முறைகள் அவதானிக்கப்படாமல் இருப்பதும் இது பற்றிய விடயங்களை மீளவலியுறுத்தும் சந்தர்ப்பங்களில் மாணவர்களுக்கு இவ்விடயங்கள் புது விடயமாகவே காணப்படுகின்றதையும் அவதானிக்கலாம்.

பாடரீதியாக பார்ப்போமானால் செய்முறை பாடவிதானத்தில் மாணவர்கள் முழுமையான அடைவு மட்டங்களை அடைய முடியாதுள்ளது. உதாரணமாக சங்கீதம் மற்றும் பரதநாட்டியம் போன்ற பாடங்களை எடுத்துக் கொண்டால் இங்கு செய்ம்முறைப் பரீட்சை என்பது க.பொ.த சாதாரண, தர மாணவர்களுக்கு கட்டாயமானதாகும். இந்த செயம்முறை விளக்கங்கள் பரதத்தினைப் பொறுத்த வரையில் ஆசிரியர் உடனிருந்து கற்பதே சிறந்த முறையாகும்.

ஆசிரியர் சொற்கட்டினை கூறி தட்டுதல் மற்றும் பாடலைப் பாடி அபிநயத்துடனும், பாவத்துடனும் வெளிக்காட்டப்படும் உருப்படிகளை மாணவர்கள் இணையவழி கற்றலின் மூலம் தெளிவு பெறுவது சிரமமாகவுள்ளது. மாணவர்கள் பயிற்சி பெற்ற விடயங்களை செய்ம்முறையாக மீட்டுக் காட்டுவதற்குரிய சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. சுங்கீதத்தைப் பொறுத்தவரையில் ஆசிரியர் பாடுவதும் அதனை மாணவர்கள் செவிமடுக்கும்போது ஏற்படும் தடங்கல் அதனை சரியாக கிரகிக்கமுடியாத நிலைமையை மாணவர்களுக்கு ஏற்படுத்துகின்றது.

இணையவழிக் கற்றலில் மூலம் செய்ம்முறையின் முழுமையான பூரணத்துவத்தினை அடைவது இலகுவான விடயமல்ல என்பது அனுபவ ரீதியான உண்மையாகும். ஒவ்வொரு மாணவனும் தகுதியுள்ளவனே அவனுக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் ஆர்வமான துறையில் அவனை தகுதியுடையவனாக மிளிரச்செய்வதே ஆசிரியரின் சவாலாகும்.

பாடசாலைக் கல்வியின்போது மாணவர்களுக்கு சுயஒழுக்கம், நேர நிர்வாகம், சமூகத் திறன் போன்ற பண்பாட்டுவிழுமியங்களையும் பேண முடியும் என்பது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோஉகள் வாதமாக உள்ளது. இந்த கருத்தையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது முக்கியமான ஒன்றுதான் ஏனெனில் பாடசாலைக்கு சென்று கல்வி கற்கும்போது உடன் படிக்கும்

மாணவர்களின் நட்புறவு போன்றவை அவர்களின் பண்பாடு மற்றும் சமூகத்திறனை வளர்க்க உதவுகின்றது, அதேபோல கவனச்சிதறல், இடையூறுகள் என்பது இணையவழி வகுப்புகளினை ஒப்பிடும்போது பாடசாலை வகுப்பறைக்கல்வியில் மிக குறைவு மற்றும் இணையவழி கல்வி என்பது அனைத்து மாணவர்களுக்கு புரியும் வகையில் உள்ளதா, அவர்களின் சந்தேகங்கள் தீர்க்கப்படுகின்றதா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஆனால் பாடசாலை வகுப்பறைச் செயற்பாடு என்றால் மாணவர்களின் புரிதலுக்கு ஏற்ற வகையில் ஆசிரியர்கள் பாடங்களை திரும்ப நடத்துவதற்கும், சந்தேகங்களினை ஆசிரியர் மற்றும் உடன் படிக்கும் நண்பர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுவதற்கும் சிறந்த வாய்ப்பினை வழங்குகிறது.

**பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட பிரதான கருப்பொருட்கூற்றுக்கள்**

பாடசாலைகளில் இசை, நடன இணைக்கலைத்திட்டத்தை அமுல்படுத்தும்போது மாணவர்களின் பண்பாட்டுவிழுமிய செயற்பாடுகளில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளில் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

- பாடசாலைகள் கல்வி அமைச்சின் கலைத்திட்டத்திற்குள்வரையறுக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் கல்விக்கொள்ளைகளுடன் இணைந்ததாக இணைக்கலைத்திட்டமும் கல்வி அமைச்சின் கலைத்திட்ட கொள்கைகளுடன் இணைத்து விழுமிய கல்விக் கொள்கைகளுக்கும் சமமுக்கியத்துவம் வழங்குகிறது.
- மெய்நிகர் வகுப்பறைக் கற்றல் – கற்பித்தலில் கேட்டல், பிரயோகம், செய்முறை (சங்கீதம், பரதம்) போன்ற அனைத்துத் திறன்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.. ஆனால் இணையவழியில் பிரயோகப்பாடங்களை கற்பிக்கும்போது இணையவலுவினைப் பொறுத்து மாணவர்களுடைய குரல் மற்றும் ஆடல் என்பவற்றை கவனிப்பது கடினமாக உள்ளது.
- ஆசிரியர்களிடையே இணையவழிக் கற்றல் – கற்பித்தல் தொடர்பான அறிவு மற்றும் திறன்கள் விருத்தியடைய வேண்டிய மட்டத்திலேயே காணப்படுகிறது.
- கல்விக் கொள்கைகளும், பெற்றோரின் இலக்குகளும் தொழில்கல்வியினை இலக்காகக் கொண்டுள்ளது. இதனால் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளான சங்கீதம், பரதம் ஆகிய செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதில் சிக்கலான நிலை காணப்படுகிறது.
- பாடசாலைகளில் விழுமியம்சார் விடயங்கள் வரையறுக்கப்பட்ட பாடவேளைகளில் இணையத்தளமூடான போதனையாக இடம்பெறுகின்றன. இதனால் மேலதிக நிகழ்ச்சிகள், விழாக்களில் பங்கேற்கும் விருப்பு குறைவடைந்து செல்லுவது அவதானிக்கப்பட்டது.
- மெய்நிகர் கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டிற்கு நேரமுகாமை இன்மை, மேற்பார்வைக் குறைப்பாடு, ஊக்குவிப்பு இன்மை, தொடர்ச்சியான கணிப்பீடு, மதிப்பீடு இன்மை, சமவாய்ப்புக்கள் வழங்கப்படாமை போன்றவை பாடசாலை மட்டத்தில் காணப்படுவதால் மாணவர்கள் முன்வந்து ஆற்றுகைப்படுத்த தயக்கம் காட்டுவது அவதானிக்கப்பட்டது.
- இணையவழியில் பயிலும்போது தொழில்நுட்பக் கோளாறுகளால் குறித்த நேரத்தில் வகுப்பை நடத்தி மதிப்பீடு பெற இயலாத சூழலுள்ளது. இவை போன்ற பல சிக்கல்கள் இணையவழிக் கல்வி முறையில் சந்திக்க வேண்டியுள்ளது.
- இணையத்தில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகள், மின்சாரத்தடங்கல், இணையஇணைப்பின் வேகம் என்பன செய்முறைப் பாடங்களைக் கற்பிக்கும்போது தொடர்ச்சியினை பேணமுடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டது. குறிப்பாக நகரம் தாண்டி வசிக்கும் மாணவர்கள் இதனால் சிரமங்களை எதிர்நோக்குவது அவதானிக்கப்பட்டது.
- மாணவனின் புலக்காட்சி அவர்கள் பார்வையிடும் திரையின் அளவினைப் பொறுத்து வேறுபடுகிறது. சிலசந்தர்பங்களில் பரதநாட்டிய பாவ அங்க அசைவுகளை துல்லியமாக பார்வையிட முடியாதுள்ளமை அவதானிக்கப்பட்டது. அனேக மாணவர்கள் கையடக்க தொலைபேசியினை கற்றலுக்காகப் பயன்படுத்துவதால் இந்நிலை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

**இணைக்கலைத்திட்ட கற்றல் – கற்பித்தலில் உள்ள சவால்களை வெற்றிகொள்ளத்தக்க வகையிலான காலமாற்றத்திற்கேற்ப முன்னெடுப்புகள்**

சமூதாயத்தை பாடசாலைக்குள் கொண்டு வருவதற்கும் பாடசாலையை சமூதாயத்திற்குள் கொண்டு செல்வதற்கும் கலை, கலாசார நிகழ்ச்சிகள் ஊடகமாக காணப்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகளில் மாணவர் பங்களிப்புச் செய்வதற்கும் வசதி வாய்ப்புக்களை வழங்குதல் வேண்டும். இவை தவிர பாடசாலை வைபவங்களாகக் கொண்டாடப்படும் விழாக்களில் நடனப் போட்டிகளை நடாத்தி மாணவர்கள் பங்குபற்றுவதற்கு மாத்திரமன்றி தாமே சுயமாக நடன நிகழ்ச்சிகளை ஆக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல் வேண்டும். கலை நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்படுதல் மாணவர்களுடைய ஆக்கத்திறன் விருத்திக்கும் நயக்கும் திறனுக்கும் துணை புரியும்.

மாணவர்மையக் கற்றல் – கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு சங்கீத, பரதக்கலைகள் நயத்தல், ஆக்கத்திறன், செயமுறை, அறிமுறை, கலாசாரப்பின்னணி என்னும் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மாணவர்களிடம் இயற்கையாக அமைந்துள்ள திறன்களை இனங்கண்டு அவற்றை மேலும் மிளிரச் செய்வதற்கும், அதேவேளை ஆர்வமுள்ள ஆனால் சற்றுப் பின்தங்கிய மாணவர்களை தேர்ச்சியடையவைப்பதற்கும், அவர்கள் தவறுகளைத் திருத்தி அம்மாணவர்களை பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடச்செய்து உச்சத்தேர்ச்சியை அடையச்செய்வதும், ஆளுமையான மாணவர்களை உருவாக்குவதும் ஆசிரியர்களின் தலையாய பொறுப்பாகும்.

பாடசாலைத் தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றுவதால் மாணவர்களின் அறிவு மேம்படுவதுடன், போட்டி போட்டு செயற்படும் விதத்தை அறிந்து கொள்ளக்கூடியதாகவும் காணப்படும், சமூகத்தில் பிற மாணவர்களுடன் சேர்ந்து பழகும் வாய்ப்பு, நட்புறவுகளை வளர்த்துக் கொள்ளல், தோல்வியை ஏற்றுக் கொண்டு வெற்றி பெற்றவர்களைப் பாராட்டும் பண்பு என சமூகமயமாக்கல் பண்புகள் வளர்க்கப்படுகின்றன. எதிர்காலத்தில் வாழ்க்கையில் வரும் தோல்விகளை தாங்கிக் கொள்வதற்கும், தற்கொலை போன்ற விடயங்களில் ஈடுபடாமல் இருப்பதற்கும் மேலும் குற்றச் செயல்களான மதுப்பாவனை போன்றவற்றில் ஈடுபடாமல் இருப்பதற்கும் இத்தகைய ஆற்றுகைச் செயற்பாடுகளே உதவுகின்றன.

மதங்களை மதித்து நடப்பதற்கு கலைகள் உறுதுணை புரிகின்றது. மற்றும் சமூகத்தில் இன, மத, ஒற்றுமைக்கும் இது வழி சமைக்கின்றது. வகுப்பறையிலே ஆசிரியர்கள் செயற்பாடுகள் பற்றிய கோட்பாடுகளை விளக்குதல், போதிய ஊக்குதலை வழங்குதல், கல்வி செயற்பாடுகளை வாழ்க்கை அனுபவங்களுடன் இணைத்தல், மாணவரிடையே காணப்படும். தனியாள் வேறுபாடுகளை அறிதல், ஜனநாயக வழிமுறைகளை கற்பித்தல், மாணவரின் ஆக்கத்திறனை மேம்படுத்தல் என்பவற்றின் வாயிலாகவும் சமூக விழுமியங்களை வளர்க்க உதவலாம்.

**நிறைவாக**

பிள்ளையின் பூரண விருத்திக்கு இணைப்பாடவிதானச் செயற்பாடு இன்றியமையாதது என்பதால் வகுப்பறையில் கற்றல் – கற்பித்தற் செயற்பாட்டுக்குப் புறம்பாக அவற்றோடு இணைந்த வகையில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கூடுதலான அக்கறையை வெளிக்காட்ட வேண்டியது அதிபர் ஆசிரியர்களது கடமையாகும். ஆயினும் பாடசாலை நேரசூசியில் இதற்கான நேரத்தை ஒதுக்குவதில் இடர்பாடு காணப்பட்டாலும் அதன் அவசியத்தை உணர்ந்து பாடசாலை நேரத்தில் வாரத்தில் ஒருமுறை அல்லது இருமுறை பாடவேளையை ஒதுக்கி அதில் பிள்ளைகளை ஈடுபடச் செய்யலாம். அல்லது பாடசாலை முடிந்த பின்னர் இம் முயற்சிகளுக்கு ஆசிரியர் சேவையை பெறக் கூடிய வகையில் அவர்களது நேரசூசியை ஒழுங்குபடுத்துவதன் மூலம் இதனை நடைமுறைப்படுத்தலாம். எவ்வாறாயினும் இணைப்பாட விதானச் செயற்பாட்டினை கூடிய வினைத்திறனைத் தரும் வகையில் அமுல்படுத்துவது அதிபர், ஆசிரியர் போன்றோரின் ஆர்வம், அர்ப்பணிப்பு என்பவற்றிலேயே தங்கியுள்ளது

அறிவுடன் பல்துறை ஆற்றல்களையும் பெற்றுக்கொள்ளும் களமாக பாடசாலைகள் அமையவேண்டும் என கல்விச் சிந்தனையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். அந்தவகையில் புரேரபல் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு மதிப்பளித்து அவர்களை நல்ல

வழிகளில் வளர்க்க சங்கீத, பரதம் போன்ற இணைக்கலைத்திட்ட பாடங்கள் மூலம் கல்வியளித்தல் அவசியம் எனக் கூறியுள்ளார். இதனால் பிள்ளைகளின் உடல், உளம் ஒருங்கிணைந்து வளர்வதோடு ஒழுக்கம், கூட்டுமனப்பான்மை என்பன வளரும் எனக் கூறியுள்ளார்

கல்வி வளமே நாட்டின் மிகச்சிறந்த மனித வளமாகும். இன்றைய சூழலில் இணைய வழிக்கல்வி மிகமிகத் தேவையாகின்றது. ஆனால் இணைய வழிக் கல்வியை நேரடி வகுப்பறைக் கல்விக்கு இணையாகக் கொள்ள முடியாது. இதனை தற்காலிக தீர்வாகக் கொள்ளலாம். மாணவர்களின் பூரண விருத்திக்கு இணைப்பாடவிதான செயற்பாடு முக்கியம் என்பதால் வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அக்கறை காட்ட வேண்டியது அவசியமானதாகும். பாடசாலைகளில் சங்கீதம், பரதம் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு நேரம் ஒதுக்கி பிள்ளைகளை ஈடுபடச்செய்யவேண்டியது அவசியமானதாகும். இவ் இணைப்பாடவிதான செயற்பாடுகள் கூடிய வினைத்திறன் அளிக்கக் கூடிய வகையில் அமுல்படுத்துவது அதிபர், ஆசிரியர், பெற்றோர், மாணவர் ஆகியோரின் ஆர்வம் அர்ப்பணிப்பிலேயே தங்கியுள்ளது. இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளினூடாக விழுமிய பண்பாடுடைய சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. இராசநாயகம்,ஜெ. (2008). கல்வியில் சமூகவியல். யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம்.
2. குமாரசாமி,சோ. (2000). மனித மேம்பாட்டுச் சிந்தனைகளும் விழுமியத்தின் அவசியமும். யாழ்ப்பாணம்.
3. கருணாநிதி,மா. (2008). கற்றல் கற்பித்தல் மேம்பாட்டிற்கான வழிமுறைகள். கொழும்பு: சேமமடுப் பதிப்பகம்.
4. Salavanisri,S. (2013). Use of information Technologies in New Approaches Learning Teaching. Chennai: Annai Velangkanni College.
5. சந்திரசேகரம்,சோ. (2013). மாணவர்களின் திறன்களை வளர்ப்பதற்கான கல்வி முறைகள். அகவிழி, (69)பப.4–6. கொழும்பு: விழுதுகள் நிறுவனம்.
6. கோபாலகிருஷ்ணஐயர்,ப. (2003). மனிதமேம்பாட்டில் கல்விசார் விழுமியங்கள் கல்வியியலாளன் ஆய்விதழ். பப128–132. மலர் 1 யாழ்ப்பாணம்: கல்வியல் வெளியீட்டு நிலையம்.
7. ஜெயராசா,சபா. (2005). குழந்தை உளவியலும் கல்வியும். யாழ்ப்பாணம்: பூபாலசிங்கம் பதிப்பகம்.